**இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல்வாங்கல்கள் - 2021**

---

இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடாபான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் ஆன காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

## 2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளக்கப்படுகின்றது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பிரகாரம், கணக்காய்விற்காக தேவையான நிதிக் கூற்றுக்களை தவிர்த்து அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுப்படுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டன.

## 2.1 நிதிக் கூற்றுக்கள்

---

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஐஐஐ ஆம் பிரிவின் 16 (2) பந்தி மற்றும் 2003 யூன் 02 திகதிய பீஈடீ.12 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கையின் வரைவு கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட | 2022 நவம்பர் 11 ஆந் திகதி நடத்தப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பித்து அதன் பந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் | நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு சட்டம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கின்றேன். இவ் அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

பின்வரும் இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாடு கணக்குகள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | அட்டவணை பிரகாரம் பெறுமதி | லெஜர் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ)கடன் பட்டோர் | 395,060,050 | 375,003,940 | 20,056,110 | அவதானிப்பு சரியானதாகும் | வேறுபாடு இனங்காணப்பட்டு சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) கடன் கொடுநர் | 294,809,272 | 263,037,778 | 31,771,494 | அவதானிப்பு சரியானதாகும் | வேறுபாடு இனங்காணப்பட்டு சீர் செய்யப்படல் வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | |
| (ை) நிதி பிரமாணம் 1645 (அ) மற்றும் பொது 267 மாதிரி | இந்த நிதி பிரமாணம் மற்றும் பொது 267 மாதிரியின் பிரகாரம் வாகனங்களுக்காக லொங் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிராததுடன், லொங் குறிப்பு புத்தகங்களில் பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | லொங் புத்தகங்களின் குறைப்பாடுகள் சீர் செய்வதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஹ) நிதி பிரமாணம் 1645 (ஆ) மற்றும் 1646 மற்றும் பொது 268 ஆம் மாதிரி பத்திரம் | இந்த நிதி பிரமாணம் பிரகாரம் ஓட்டக் குறிப்புக்கள் உரிய வகையில் பேணிச் செல்லப்பட்டிராததுடன், பொது 268 மாதிரியின் பிரகாரம் அறிக்கையிடப்பட்டு நாள்தோறும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | பயணக் குறிப்புக்கள் மற்றும் தொடர்புடைய அறிக்கைகள் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2020 ஒக்தோபர் 02 திகதிய 05.'.2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 (அ) மற்றும் (ஆ) பந்தி | 2021 ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக 14 மோட்டார் வாகனங்கள் காணப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டிலிருந்தே 06 வாகனங்கள் இயக்கத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. 2022 இலும் ஒரு மோட்டார் வாகனம் மட்டும் இயக்கப்பட்டிருந்ததுடன், இந்த சுற்றறிக்கை பிரகாரம் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்தப்படாத வாகனங்கள் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையானது, அனைத்து வாகனங்களையும் பழுதுபார்த்து இயக்குவதற்கு ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை பிரகாரம் பழுதுப்பார்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4. தகவல் தொழிநுட்பம் (ஐரீ) பொதுவான கட்டுப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனம் கணினியின் ஊடாக கணக்கு வைப்பதற்காக ‘‘குயிக் புக்’’ (ஞரஉைம டிழழம) மென்பொருள் அமைப்பு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தியிருந்தது. தகவல் தொழிநுட்ப பிரிவொன்று இன்றி மற்றும் மென்பொருள் அமைப்பின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டிற்காக பொறுப்பு கூற வேண்டிய மேற்பார்வையாளர் ஒருவர் இன்றி பயன்படுத்தப்பட்ட இந்த அமைப்பிற்காக முறையான உள்ளக கட்டுப்பாடு மற்றும் அமைப்பு கட்டுப்பாடு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு அமைப்பிற்கு இணையாக எழுத்துமூலமாக புத்தகங்கள் பேணிச் | கணக்கீட்டு மென்பொருள் அமைப்பு தொடர்பாக கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட குறைப்பாடுகள் சீர்செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிறுவனத்தினுள் கணக்கிடுவதற்கு பயன்டுத்தப்படுகின்ற ‘‘ஞரஉைம டிழழம’’ மென்பொருள் பயன்பாட்டின் போது பயிற்சி மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு உத்திகள் அறிமுகப்படுத்தி கணக்காய்வு ஐயவினா ஊடாக சுட்டிக்காட்டப்பட்ட குறைப்பாடுகள் சீர் செய்யப்பட்டு மென்பொருள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லல் 2020 ஆம் ஆண்டிலேயே நிறுத்தப்பட்டிருந்ததுடன், பின்னோக்கிய வண்ணம் அமைப்பிற்கு தகவல்கள் உள்ளடக்கப்படுவதற்கு மற்றும் அமைப்பிலிருந்து தரவுகள் அகற்றப்படுவதற்கு அமைப்பினுள் காணப்பட்ட விசேட இயலுமையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற நிதி புள்ளிவிபரங்களின் நம்பகத்தன்மையில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. கணினி அமைப்பின் மேலதிக பிரதிகள் (டீயஉமரி) பாதுகாப்பாக வைக்கப்படாமை மற்றும் அவை மீண்டும் அமைப்பிற்குள் உள்ளடக்கப்படாமையும், அமைப்பிற்கான வினைத்திறனான வன்பொருள்கள் காணப்படாமையும், வெளி கணக்காய்வாளருக்கு அமைப்பிற்குள் நுழைவதற்கு சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்படலும் அடிப்படையில் கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைஊடாகவும் காண்பிக்கப்பட்ட இந்த கணினிமயமாக்கப்பட்ட கணக்கீட்டு அமைப்பினுள் காணப்படுகின்ற ஆபத்தான நிலை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் கணக்கு வைத்தல், திரைப்பட வாடகை வருமான பதிவுகளை வைத்திருத்தல் மற்றும் சம்பளம் உட்பட ஊழிய சேமலாப நிதிய மற்றும் ஊழிய நம்புக்கை பொறுப்பு நிதிய கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கைகள் வைத்துக் கொள்வதற்காக முறையே குயிக் புக், சீபா மற்றும் விஷுல் பேசிக் பெயரிலான ஒவ்வொன்றிற்கும் தொடர்பற்ற 03 கணினி மென்பொருள்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த மென்பொருள்கள் இடையே தரவுகள் மற்றும் தகவல்கள் தன்னிச்சையாக பரிமாற்றப்படாமையினால் பிழைகள் மற்றும் மோசடிகள் ஏற்படுவதற்கு அதிகளவான சந்தர்ப்பம் காணப்பட்டதுடன், நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு 2022 ஆம் ஆண்டினுள் முழுமையாக செயலிழந்தமையும், கணனிமயப்படுத்தப்பட்ட உள்ளக கட்டுப்பாடு மற்றும் அமைப்பு | இந்த கணினி செயல்நிரல்கள் ஒவ்வொருவருக்கும் சுயாதீன அமைப்புக்களாக செயற்படுத்தப்படுகின்றன. இந்த செயல்நிரல்கள் இடையே தன்னிச்சையாக தகவல்கள் பரிமாற்றிக் கொள்வதற்காக தனியே கணினி செயல்நிரலொன்று தயாரிக்கப்படல் வேண்டும். எதிர்காலத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். | உள்ளக கட்டுப்பாடு உத்திகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு முறைகளும் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன், உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு அமைப்பு கட்டுப்பாட்டு உத்திகள் பயன்படுத்தி ஒப்பிடக் கூடிய வண்ணம் இந்த அறிக்கைகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

கட்டுப்பாடு உத்திகள் குறைவாக காணப்படுகின்றமையினால் கணினிமயப்படுத்தப்பட்ட நிதி புள்ளிவிபரங்களின் தரவுகள் மற்றும் அறிக்கைகள் நம்பகத்தன்மையாக காணப்படாததுடன், அவை ஒப்பிடப்பட்டு பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த பெறுமதி ரூபா 68,456,027 ஆன 69 திரையறங்குகள் ஊடாக கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அழைக்கப்பட்டதுடன், திரையறங்குகள் மூடப்பட்டமை, உடைத்து அகற்றப்பட்டமை மற்றும் திரையறங்குகள் அவ் முகவரிகளில் காணப்படாமை காரணத்தினால் 27 மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கே பெறப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அந்த 27 திரையறங்குகளிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட முடியாதிருந்த நிலுவை தொகை ரூபா 23,380,463 ஆக காணப்பட்டது. | அவதானிப்பு சரியானதாகும். | கடன் தவணை மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கான செயன்முறை உயர் முகாமைத்துவத்தினால் முறையாக மற்றும் வினைத்திறனாக செயற்படுத்தப்பட வேண்டியதுடன், நிலுவையாகவுள்ள பழைய மீதிகள் அறவிடப்படுவதற்கு மற்றும் தீர்க்கப்படுவதற்கு கடுமையான கட்டுப்பாட்டு உத்திகள் பின்பற்றப்படுவதற்கும் எதிர்காலத்தில் கொடுக்கப்படுகின்ற பணம் மற்றும் சேவையின் அடிப்படையில் கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட முடியாக் கடனாக இன்றி அறவிடப்படுவதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் மொத்த பெறுமதி ரூபா 71,334,541 ஆன 105 திரைப்பட தயாரிப்பு கடன்பட்டோர் ஊடாக கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அழைக்கப்பட்டதுடன், வெவ்வேறு காரணங்களினால் அக் கடிதங்களுள் 22 கடிதங்கள் கையேற்காமையினால் மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கே பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீதிகள் | அவதானிப்பு சரியானதாகும். | கடன் தவணை மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கான செயன்முறை உயர் முகாமைத்துவத்தினால் முறையாக மற்றும் வினைத்திறனாக செயற்படுத்தப்பட வேண்டியதுடன், நிலுவையாகவுள்ள பழைய மீதிகள் அறவிடப்படுவதற்கு மற்றும் தீர்க்கப்படுவதற்கு கடுமையான கட்டுப்பாட்டு உத்திகள் பின்பற்றப்படுவதற்கும் எதிர்காலத்தில் கொடுக்கப்படுகின்ற பணம் மற்றும் சேவையின் |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்தப்படாத 22 தயாரிப்பு கடன்பட்டோர் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட முடியாத தயாரிப்பு கடன் தொகை ரூபா 20,401,950 ஆக காணப்பட்டது. | | அடிப்படையில் கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட முடியாக் கடனாக இன்றி அறவிடப்படுவதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரைப்பட தயாரிப்பு மற்றும் திரையறங்குகள் நவீனமயமாக்கலுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகையில் ரூபா 81,499,905 மற்றும் திரையறங்குகளிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டிய மொத்த நிலுவை தொகை ரூபா 375,003,940 உள்ளடங்கலாக ரூபா 456,503,845 ஆன தொகை கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டியிருந்தது. அம் மொத்த பெற வேண்டிய தொகையில் மொத்தம் ரூபா 333,443,132 ஆன மிகைக்கட்டணம் மற்றும் ஐயக்கடனாக ஒதுக்கப்பட்டமையினால் 2021 திசெம்பர் 31 இல் அறவிடப்படக் கூடிய தேறிய கடன் மீதி ரூபா 123,060,713 ஆக, அதாவது மொத்த கடன்பட்டோரில் 27 சதவீதமாக காணப்பட்டது. அந் நிலுவை தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திரைப்பட தயாரிப்பு மற்றும் திரையறங்கு நவீனமயப்படுத்தலுக்காக 2021 ஆம் ஆண்டினுள் ஒப்பந்தம் செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை தொகை அறவிடப்படுவதற்கு தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் தவணை மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கான செயன்முறை உயர் முகாமைத்துவத்தினால் முறையாக மற்றும் வினைத்திறனாக செயற்படுத்தப்பட வேண்டியதுடன், நிலுவையாகவுள்ள பழைய மீதிகள் அறவிடப்படுவதற்கு மற்றும் தீர்க்கப்படுவதற்கு கடுமையான கட்டுப்பாட்டு உத்திகள் பின்பற்றப்படுவதற்கும் எதிர்காலத்தில் கொடுக்கப்படுகின்ற பணம் மற்றும் சேவையின் அடிப்படையில் கடன்பட்டோர் மீதிகள் அறவிட முடியா கடனாக இன்றி அறவிடப்படுவதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப் பெற வேண்டிய நிலுவை தொகை அறவிடப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டில் நிலுவைத் தொகை அறவிடல் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. பொது முயற்சிகள் திணைக்களத்தினாலும் 2021 திசெம்பர் 31 இல் அண்மைய 10 ஆண்டுகளின் நிலுவை கடன் மற்றும் நிலுவை தொகை உரிய முறைமையின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும், நிலுவைத் தொகை | 2021 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட நிலுவை தொகையை அறவிடும் குழு பரிந்துரை இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. அப் பரிந்துரை சமர்ப்பித்தவுடனே அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் திணைக்கள ஆலோசனை மற்றும் கடன் அறவிடல் குழுவின் ஆலோசனை பிரகாரம் செயற்பட்டு நிலுவை தொகையை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிடும் குழு பரிந்துரை 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வு திகதி வரையில் வழங்கப்பட்டிராததுடன், பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனை பிரகாரம் நிலுவை கடன்கள் அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம், திபிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான குருதுவத்த கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மு.தி.கோ 9848 ஆம் பகுதியில் துண்டு இல 01 அளவில் 1.1235 ஹெக்டேயார் ஆன காணியில் அமைந்திருந்தது. இந்த காணியின் சட்ட ரீதியான உரித்து கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்தாது அங்கு கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் உட்பட கூட்டுத்தாபனத்தின் சில கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்கு கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனம் அமைந்துள்ள இந்த காணித்துண்டு கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்த காணியின் சட்ட ரீதியான உரித்தினை கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 224 ஆம் இலக்கத்தை கொண்ட பிரதேசத்தில் அமைந்துள்ள இரு மாடிக் கட்டிடத்தின் முதலாம் மாடி 4660 இலக்கத்தை கொண்ட குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2019 சனவரி 14 ஆம் திகதி வரை மாதாந்தம் ரூபா 315,000 ஆன வாடகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தம் நாளதுவரையாக்கப்படாது மற்றும் மொத்தம் ரூபா 12,111,000 ஆன நிலுவை குத்தகை தொகை செலுத்தப்படாது கட்டிடம் யன்படுத்தப்பட்டு 2022 மார்ச் 28 ஆம் திகதி கட்டிடம் மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2022 ஒக்தோபர் மாதம் வரை இந்த நிலுவை குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 2022 மார்ச் 28 திகதிக்கு பின்னர் அக் கட்டிடம் பயனுள்ள பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு கோவை முன்வைக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் நிகழ்கால பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நிலுவைத்தொகை குத்தகைதாரரிடமிருந்து அறவிடப்படுவதற்கும் ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்ட தரப்பினராக கூட்டுத்தாபன உயர் முகாமைத்துவம் குறித்த ஒப்பந்த செயன்முறையில் பணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 224 ஆம் இலக்க வளாகத்தில் அமைந்துள்ள இரு மாடிக் கட்டிடத்தின் மேல் மாடி கட்டிடம் 4797 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 02 ஆண்டுகளுக்கு மாதாந்தம் ரூபா 345,000 வீதம் சார்க் கலாச்சார மத்திய நிலையத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அக் குத்தகை காலப்பகுதி 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்த போதிலும், 2022 ஒக்தோபர் மாதம் வரையிலும், எழுத்து மூலமாக புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படாது கட்டிடம் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சார்க் கலாச்சார மத்திய நிலையம் மற்றும் கூட்டுத்தாபனம் இடையே புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கும் நிலுவை தொகை அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 224 ஆம் இலக்க வளாகத்தில் அமைந்துள்ள ஒரு மாடிக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் பிரபல்யமான நாட்டிய கட்டுப்பாட்டு சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இரு தரப்பினர் இடையே இறுதியாக 2017 சனவரி 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 4711 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தம் 2018 திசெம்பர் 31 இல் நிறைவடைந்திருந்தது. நாட்டிய கட்டுப்பாட்டு சபையினால் அக் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீறப்பட்டு அக் கட்டிடத்தினை உடைத்து அகற்றி 2576 சதுர அடியிலான இரு மாடிக் கட்டிடமொன்றினை நிர்மாணித்திருந்தது. குத்தகை ஒப்பந்தம் நிறைவடைந்து 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும், கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த அவதானிப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு புதிய கட்டிடத்திற்காக மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு வாடகை மதிப்பிடப்பட்டு, உரிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 2021 ஆம் ஆண்டிற்கான நிலுவை குத்தகை | பிரபல்யமான நாட்டிய கட்டுப்பாட்டு சபை மற்றும் கூட்டுத்தாபனம் இடையே புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு குத்தகை ஒப்பந்த காலப்பகுதி தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு புதிய பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபை பத்தரிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த விடயம் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய தரப்பினருக்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும், உரிய எழுத்துமூல ஒப்பந்தத்திற்கு விரைவாக உடன்படுவதற்கும், நிலுவை தொகை அறவிடப்படுவதற்கும், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகை மதிப்பிடுவதற்கு மற்றும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) டாக்டர் ''லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்'' அவர்கள் பெயரில் கூட்டுத்தாபன வளாகத்தினுள் நூதனசாலையொன்று மற்றும் நூலகமொன்று நிர்மாணிப்பதற்காக கட்டுமானம் மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளின் மதிப்பிடப்பட்ட கூட்டு பெறுமதி ரூபா 99,965,061 இற்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிப்பதற்கு இரு தரப்பு ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டு 2019 ஏப்ரல் 05 ஆம் திகதி அதன் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் அமைச்சரவை அங்கீகாரமின்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிர்மாணிப்பிற்கு 2021 திசெம்பர் 31 இல் ரூபா 3,134,107 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்ட இந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கைவிடப்பட்டிருந்ததுடன், நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டிடத்தில் உள்ள இரும்பு கம்பிகள் கடுமையாக அரிக்கப்பட்டிருந்தமையினால் கட்டிடம் சேதமடைந்து வந்தது. | இந்த கட்டிட நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள காணிக்காக புதிய ஒப்பாவணம் தயாரிக்கப்படுவதற்கு திபிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. பெறுகை தீர்மானம் பிரகாரம் அமைச்சரவை விஞ்ஞாபன வரைவொன்று 2020 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சிற்கு சமர்ப்பித்த போதிலும், அமைச்சினால் மேல் நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் செயற்திட்டம் இடை நடுவே நிறுத்தப்பட்டுள்ளது. | 2021 யூலை 19 திகதி நடைப்பெற்ற பொது முயற்சிகள் செயற்குழு கூட்டத்தின் போது பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) 2021 திசெம்பர் 31 இல் வெவ்வேறு நீதிமன்றங்களில் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருகின்ற கூட்டுத்தாபனம் பிரதிவாதியாகவுள்ள 15 வழக்குகளும், தொழிலாளர் புகார்கள் 05 உம், திரைப்படங்கள் மற்றும் நாடகங்கள் பணிப்பாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 09 மனித உரிமைகள் புகார்களும், இறுதி முடிவு பெற்றுக்கொடுக்க முடியாது பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. இந்த வழக்குகள் பல ஆண்டுகளாக பரீட்சிக்கப்பட்டு வருகின்றமையினால் கூட்டுத்தாபனத்தின் உயர் பதவிகள் சிலவற்றில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இல்லாமையும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பணி | நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையும் வரை வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காக அண்மைய உத்தியோகத்தருக்கு பதிற்கடமை நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பதவியணி மறுசீரமைக்கப்பட்ட பின்னர் நிறுவன கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 யூலை 19 திகதி நடைப்பெற்ற பொது முயற்சிகள் செயற்குழு ஆலோசனை பிரகாரம் இந்த பரிசோதனை விரைவாக நிறைவு செய்யப்பட்டு ஊழியர்களின் சிக்கல்கள் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| நேரத்தினை செலவிட நேருகின்றமையும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டிற்கு பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. | | |
| (ஐ) 2021 யூலை 19 திகதி நடைப்பெற்ற பொது முயற்சிகள் செயற்குழு கூட்ட அறிக்கை பிரகாரம் 2021 ஆகஸ்ட் 05 திகதிய கடிதத்தின் ஊடாக கோப் குழுவின் 14 கட்டளைகள் கூட்டுத்தாபனத்திற்கு முன்வைக்கப்பட்டிருந்தது. அக் கட்டளைகள் நிறைவேற்றப்பட வேண்டிய உரிய காலப்பகுதியும் குறிப்பிட்டு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததுடன், அக் கட்டளைகளில் 07 இந்த அறிக்கை திகதி வரையிலும் நிறைவு செய்வதற்கு மற்றும் அது தொடர்பான செயன்முன்னேற்றம் கோப் குழுவிற்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டளைகள் தொடர்பாக நிகழ்கால நிலை 2022 ஏப்ரல் 27 ஆம் திகதி அறிக்கையிடப்பட்டுள்ள-துடன், குழு கட்டளை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2021 யூலை 19 ஆம் திகதிய கோப் குழு கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் 2021 ஆகஸ்ட் 05 திகதிய கடிதத்தின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்பட்ட குழு கட்டளை பிரகாரம் முகாமைத்துசம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) களணி தளுகம சரசவி படப்பிடிப்புக் கூடத்தில் பழமையான திரைப்படங்களின் கடினப்படங்கள் பாதுகாப்பிற்காக திரைப்பட காப்பகமொன்று பராமரிக்கப்பட்டு வந்தது. அத் திரைப்பட காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வின் போது அவ்வாறு பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ள கடினப்படங்கள் தொடர்பான எழுத்துமூல உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சில திரைப்படங்களின் கடினப்படங்கள் முழுமையாக அல்லது பகுதியளவில் காணாமல் போயிருந்தன. பாதுகாக்கப்பட்ட கடினப்படங்கள் தொடர்பான பட்டியல் நாளது வரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படாமை காரணத்தினால் காணாமல் போன கடினப்படங்கள் தொடர்பான பொருண்மையான தகவல்கள் அவதானிக்கப்படவும் முடியாது போனது. அக்கடினப்படங்கள் பாதுகாக்கப்படவும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சில கடினப்படங்கள் முழுமையாக அல்லது பகுதியளவில் அழிந்திருந்தன. எஞ்சிய இருப்பு மீளாய்வுகளின் போது அவை அறிக்கையிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக் கொண்டேன். | கடினப்படங்கள் தொடர்பான பட்டியல் பேணிச் செல்லப்பட வேண்டியதுடன், கடினப்படங்களை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3. செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 4 (எ) பிரிவின் பிரகாரம் இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்களுக்காக இலங்கையினுள் அல்லது வெளியில் கேள்வி மற்றும் திரைப்பட வியாபாரத்தினை மேம்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்காலத்தில் திரைப்பட தயாரிப்பு குழுவினாலேயே மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 4 (ஏ) பிரிவின் பிரகாரம் இலங்கையினுள் மற்றும் இலங்கையின் வெளியே திரைப்படங்கள் தொடர்பான சந்தை ஆய்வு நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணிக்காக போதுமான நிதியேற்பாடு இல்லாமையின் காரணத்தினால் பணி ஆரம்பிப்பதற்கு முடியாது போனது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) இலங்கையில் உயர் தரத்திலான திரைப்பட கலாச்சாரமொன்றை ஏற்படுத்துவதற்காக தேவையான கலை, ஆற்றல் மற்றும் தொழிநுட்ப அடிப்படையொன்றினை தயாரிக்கும் நோக்கங்களை முன்னனியாகக் கொண்டு திரைப்படவியல் தொடர்பான ஓராண்டு டிப்லோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் கொவிட் நிலையில் மாணவர்கள் இணைக்கப்பட்டிராததுடன், 2021 ஆம் ஆண்டில் 43 மாணவர்கள் இணைக்கப்பட்டு 2021 மார்ச் 27 ஆந் திகதி பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு 2022 செப்தெம்பர் 27 ஆம் திகதி இந்த பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த டிப்லோமா திரைப்பட கல்லூரி வரையில் அபிவிருத்தி செய்வதற்கு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் மாதம் வரை அந் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது. | திரைப்பட டிப்லோமா பாடநெறி மிகவும் உயர் நிலைக்கு கொண்டு வருவதற்காக பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், நிதி பிரச்சினைகளினால் வசதிகள் பூர்த்தி செய்துக் கொள்வதற்கு முடியாது போனது. | திரைப்படவியல் தொடர்பான ஓர் ஆண்டு டிப்லோமா பாடநெறியானது திரைப்பட கல்லூரி வரையில் அபிவிருத்தி செய்து கூட்டுத்தாபனத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) "திரைப்படங்கள் விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தலுக்குரிய முறைமை" தயாரித்து அம் முறைமை தயாரித்து செயற்படுத்துவதற்காக 2021 யூன் 22 திகதிய அமப/21/1024/305/022 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அவ் அங்கீகாரம் பிரகாரம் திரைப்படங்கள் விநியோகிக்கும் செயன்முறை கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்திக் கொள்வதற்காக இந்த செயன்முறை வர்த்தமானி பத்திரிக்கை ஊடாக பிரசித்தி படுத்தப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் மாதம் வரை மேற்படி விடயம் வர்த்தமானி பத்தரிக்கை ஊடாக பிரசித்திப்படுத்தியிருக்கவில்லை. | திரைப்பட விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தும் முறைமை வர்தத்மானி பத்தரிக்கை ஊடாக பிரசித்திப் படுத்துவதற்கு 2021 ஆகஸ்ட் 17 ஆம் திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றத்திற்காக 2021 யூன் 22 ஆந் திகதி அமைச்சரவை பெற்றுக் கொடுத்த அமைச்சரவை தீர்மானத்தினை செயற்படுத்துவதற்கும், அதற்கான வர்த்தமானி பத்தரிக்கை வெளியிடப்படுவதற்கும் உயர் முகாமைத்துவம் செயற்படல் பொருத்தமானதாகும். |

## 3.4. விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல், கூட்டுதாபனத்தினால் 08 நடைமுறை கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன. அத் திகதியில் அந் நடைமுறை கணக்குகளில் காசு புத்தகத்தின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 31,466,837 ஆன சாதகமான வங்கி மீதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு முழுவதிலும் இந்த நடைமுறை கணக்குகளில் காசுப் புத்தகத்தின் பிரகாரம் பேணிச் செல்லப்பட்டிருந்த சாதகமான சாதரண மீதிகளின் மொத்தம் ரூபா 22,096,882 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 22,096,882 ஆன தொகை பயனுள்ள பணிகளுக்கு பயன்படுத்தப்படாது 2021 ஆம் ஆண்டு முழுவதும் 08 நடைமுறை கணக்குகளில் விளைவற்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தற்போது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து வட்டி விகிதங்கள் கேட்டு அறியப்பட்டு அதிகமான வட்டி வீதத்தினை உடைய நிறுவனங்களில் இந்த பணத்தொகை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடைமுறை கணக்கினுள் காணப்படுகின்ற சாதகமான மீதிகள் பயனுள்ள முறையில் குறுகிய காலத்திற்கு முதலீடு செய்வதற்கு அல்லது நடைமுறை கணக்கினுள் உயர் சாதகமான மீதிகள் நீண்ட காலத்திற்கு பேணிச் செல்லாதிருக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) களணி தளுகம சரசவி படப்பிடிப்புக் கூடம் அமைந்துள்ள வளாகத்தினுள் காணப்படும் குளங்கள் சுத்தப்படுத்தி படப்பிடிப்பு கூடத்திற்கு பொருந்தும் வகையில் பராமரிப்பதற்கும், அவ் | குளத்தினை செப்பனிடல், கால்வாயினை சுத்தப்படுத்தல் மற்றும் படப்பிடிப்பு கூட வளாகத்தினுள் காணப்படுகின்ற உடைத்து | படப்பிடிப்பு கூட வளாகம் மற்றும் கட்டிடத்தினை பயனுள்ள பணிகளில் ஈடுப்படுத்தி வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| வளாகத்தின் ஊடாக பாய்ந்து ஓடும் கால்வாயை சுத்தப்படுத்தி பராமரித்து செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், படப்பிடிப்பு வளாகத்தினுள் உடைத்து அகற்றப்பட வேண்டிய சேதமடைந்திருந்த ஒரு மாடிக் கட்டிடமொன்றும் காணப்பட்டது. படப்பிடிப்புக் கூடத்தின் கதவில் பெயர் பலகையொன்று பொருத்துவதற்கும், படப்பிடிப்பு வளாகம் படப்பிடிப்பு கூடத்திற்கு பொருந்துமாறு கண்கவரும் விதத்தில் பராமரித்து செல்வதற்கும் உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிராததுடன், நகர சூழலொன்றில் அமைந்துள்ள இந்த படப்பிடிப்பு கூடம் மற்றும் அது அமைந்துள்ள வளாகம் கூட்டுத்தாபனத்திற்கு பொருளாதார நலன் பெறக்கூடிய பணியில் ஈடுப்படுத்தாமையினால் விளைவற்ற சொத்தாக காணப்பட்டது. | அகற்றப்பட வேண்டிய கட்டிடம் உடைத்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. படப்பிடிப்பு கூடதினை அலங்கரிக்கும் பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) 2021 திசெம்பர் 31 இல் மொத்த பெறுமதி ரூபா 870,659 ஆன கடினபடங்கள் மற்றும் இரசாயன பொருட்கள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் காலாவதியாகியிருந்தமை மற்றும் நிகழ்காலத்தில் பயன்படுத்தப்படாமை காரணத்தினால் பிரதான களஞ்சியத்தினுள் காணப்பட்டதுடன், கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த இந்த விளைவற்ற சொத்து கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இருப்பில் பகுதியொன்று காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியவை கைதவிர்ப்பு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத கடின படங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தொடர்பான சரியான தகவல்கள் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டு அவை சுற்றாய்வு குழு தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் சட்டதிட்டங்கள் பிரகாரம் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) கூட்டுததானத்தின் பிரதான களஞ்சியத்தினுள் 05 ஆண்டுகளை கடந்த 7,917 திரைப்பட இதழ்கள் மற்றும் காலங்கடந்த நிகழ்காலத்தில் பயன்படுத்தப்படாத பொருட்கள் 450 சதுர அடி இடப் பரபப்பில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் பதிவேடுகளின் ஊடாக கிரயம் அல்லது நிகழ்கால பெறுமதி இணங்காணப்பட முடியாத இந்த பொருட்கள் தொடர்பாக கடந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், சேதமடைந்து | ஆண்டு இறுதி இருப்பு மெய்மையாய்வின் போது இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கபடும். | பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக சரியான தகவல்கள் பொருள் மெய்மையாய்வின் போது இணங்காணப்பட்டு அவை சுற்றாய்வு குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரும் இந்த பொருட்கள் கைதவிர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ‘‘தரங்கனி’’ திரையறங்கின் நடவடிக்கைகளுக்காக ரூபா 11,460,155 கொடுப்பனவு செய்யப்பட்டு, 4மு னுஊீ பல்லுருக்காட்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், இந்த இயந்திரம் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான மேலதிக பகுதிகள் 2022 ஆம் ஆண்டு வரையிலும் கொள்வனவு செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. இந்த பல்லுருக்காட்டி செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியாததினால் அதை கொள்வனவு செய்வதற்கு செலவு செய்த பணம் மற்றும் ‘‘தரங்கனி’’ திரையறங்கு விளைவற்று காணப்பட்டது. | இந்த இயந்திரம் பழுதுபார்த்தலுக்காக முகவர் நிறுவனத்திற்கு முன்வைக்கப்பட்டு பரிசோதனை அறிக்கையொன்று மற்றும் மதீப்பீடொன்று பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த பல்லுருக்காட்டி செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வந்து ‘‘தரங்கனி’’ திரையறங்கிற்கு வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.5. பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் களனி தலுகம சரசவி படப்பிடிப்புக் கூடத்திற்காக மொத்தம் ரூபா 857,050 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு 5.1 அளவிலான ஒலி மீளுருவாக்கும் அமைப்பொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த பெறுகை பணி நிறைவேற்றம் போது அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.5.1 (ஈ), 4.3.2 மற்றும் 5.3.2 பிரிவுகள் பிரகாரம் கடந்த பெறுகை நடவடிக்கைகள், மொத்த கிரய மதிப்பீடு அங்கீகரித்தல் மற்றும் மனுதாரர்களிடமிருந்து கோரப்படல் போன்ற பெறுகை நடவடிக்கைகள் பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது மிகவும் அவசரமான பெறுகை பணியொன்றாக காணப்பட்டதுடன், இந்த அமைப்பு தாபிக்கப்பட்டதன் பின்னர் தற்போது அண்ணவளாக ரூபா 2.3 மில்லியன் வருமானமொன்று ஈட்டப்பட்டுள்ளது. | பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் நடவக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 186 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாரான பதவியணி 119 ஆகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 67 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களில் 10 பதவிகள் தற்போது கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் பதிற் கடமை, கடமை நிறைவேற்றல், கடமை மேவுகை செய்தல் போன்ற பல்வேறு அடிப்படைகளில் நிரப்பப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட மட்டத்தின் 03 பதவிகள் காணப்பட்டதுடன், அவ் 3 பதவிகளில் 02 நிரந்தரமல்லாத மாற்று அடிப்படையில் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கூட்டுத்தாபனத்தின் இந்த ஊழிய வெற்றிடங்கள் நீண்ட காலம் தொடக்கம் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நிரப்பப்படாமையின் காரணத்தினால் அதன் செயற்பாடு மற்றும் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | வெவ்வேறு காரணங்களினால் ஆட்சேர்ப்பு செய்ய முடியாத பதவிகளுக்காக தொடர்புடைய அண்மைய உத்தியோகத்தருக்கு பதிற் கடமை∴ கடமை நிறைவேற்றல் அடிப்படையில் நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பதவியணி மறுசீரமைப்பின் பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்படும். | அரசின் நிகழ்கால ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஊழியர் முகாமைத்துவம் மேற்கொண்டு நிறுவனத்தின் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1. வருடாந்த அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் பீஈடீ∴12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் குறித்த நிதி ஆண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் 03 மொழிகளிலான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 இன் பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 – 2017 வருடாந்த அறிக்கைகள் அச்சிடப்பட்டுள்ளதுடன், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு வரிசை அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளன. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான வருடாந்த அறிக்கைகள் தாமதமின்றி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2. கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய பிஈடீ∴.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 பிரிவின் பிரகாரம் தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டினை மேவுகை செய்து கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு மூவாண்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | 2003 யூன் 02 திகதிய பிஈடீ∴.12 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.3. உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏஐஐ ஆம் பகுதி 40 (1) பந்தியின் பிரகாரம் குறித்த நிறுவனத்திற்காக உள்ளக கணக்காய்வாளரொருவர் காணப்பட வேண்டியதுடன், 2021 திசெம்பர் இல் உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவில் சேவையாற்றிய உத்தியோகத்தரொருவர் கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலகிய பின்னர் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயலற்று காணப்பட்டது. | உள்ளக கணக்காய்வாளரொருவர் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த போதிலும், வரிசை அமைச்சின் ஆலோசனை மற்றும் அரச கொள்கை அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமித்து அல்லது திறைச்சேரி ஆலோசனை பிரகாரம் செயற்பட்டு உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக பதவியணி ஈடுபடுத்தப்பட்டு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |